# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.C.C.7/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.1 |
| Name | : | கலைவாணன் |
| Father's Name | : | த.பெ.கன்னியப்பன் |
| Village | : | மீசநல்லூர் கிராமம் |
| Taluk | : | வந்தவாசி |
| Calling | : | . |
| Religion | : | இந்து |
| Age | : | 43 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 25.03.2026.

**1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.**

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். தனியார் மருத்துவமனையில் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் நானும் அவர்களும் ஒரே ஊரை சார்ந்தவர்கள்.

கடந்த 18.01.2024ம் தேதி சொந்த வேலையின் காரணமாக தெள்ளாருக்கு சென்றபோது மாலை 3.30 மணி அளவில் பாஸ்ட்புட் கடையில் சிலர் என்னிடம் தகராறு செய்து கைகளாலும் எல்மெட்டாலும் தாக்கினார்கள் அதனால் எனக்கு காயம் ஏற்பட்டு வந்தவாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். அங்கு வந்த போலிசார் என்னை விசாரணை செய்து கையெழுத்து வாங்கி சென்றார்கள் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.1 ஆகும்.

அந்த புகாரை நான் எழுதவில்லை அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. சம்பவ தினத்தன்று என்னை தாக்கிய நபர்கள் ஆஜர் எதிரிகள் அல்ல. தற்போது ஆஜர் எதிரிகளுடன் நீதிமன்றத்திற்கு வெளியே பெரியோர்கள் மத்தியில் சமாதானம் ஏற்படுத்திக்கொண்டு சமாதான மனு தாக்கல் செய்திருக்கிறேன் அதில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான் அது அ.த.சா.ஆ.2 ஆகும். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் எதிரிகளை வழக்கில் இருந்து விடுவிப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

இல்லை.

// **உண்மை நகல்** //

Taken down by me in Open Court, Read over to the witness and Admitted by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.